NAME :

CLASS & SEC. :

# 4 வடிவியல்

அளவிடமுடியாத நிலையை புரிந்துகொள்வதே வடிவியல் பற்றிய அறிதலின் நோக்கமாகும் –பிளேட்டோ


## பலவுள் தெரிவு வினாக்கள்

1. $\dfrac{AB}{DE}=\dfrac{BC}{FD}$ எனில், $ABC$ மற்றும் $EDF$ எப்பொழுது வடிவொத்தவையாக அமையும்.
(அ) $\angle B=\angle E$ (ஆ) $\angle A=\angle D$ (இ) $\angle B=\angle D$ (ஈ) $\angle A=\angle F$

2. $\Delta LMN$ -யில் $\angle L=60^\circ$, $\angle M=50^\circ$ மேலும், $\Delta LMN\sim\Delta PQR$ எனில், $\angle R$ –யின் மதிப்பு
(அ) $40^\circ$ (ஆ) $70^\circ$ (இ) $30^\circ$ (ஈ) $110^\circ$

3. இருசமபக்க முக்கோணம் $\Delta ABC$ -யில் $\angle C=90^\circ$ மற்றும் $AC=5$ செ.மீ, எனில் $AB$ ஆனது
(அ) 2.5 செ.மீ (ஆ) 5 செ.மீ (இ) 10 செ.மீ (ஈ) $5\sqrt{2}$ செ.மீ

4. கொடுக்கப்பட்ட படத்தில் $ST\parallel QR$, $PS=2$ செ.மீ மற்றும் $SQ=3$ செ.மீ. எனில், $\Delta PQR$ –யின் பரப்பளவுக்கும் $\Delta PST$ –யின் பரப்பளவுக்கும் உள்ள விகிதம்
(அ) 25 : 4 (ஆ) 25 : 7
(இ) 25 : 11 (ஈ) 25 : 13





5. இரு வடிவொத்த முக்கோணங்கள் $\Delta ABC$ மற்றும் $\Delta PQR$ –யின் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். $PQ=10$ செ.மீ எனில், $AB$–யின் நீளம்
(அ) $6\frac{2}{3}$ செ.மீ (ஆ) $\frac{10\sqrt{6}}{3}$ செ.மீ (இ) $66\frac{2}{3}$ செ.மீ (ஈ) 15 செ.மீ

6. $\Delta ABC$ –யில் $DE\parallel BC$. $AB=3.6$ செ.மீ, $AC=2.4$ செ.மீ மற்றும் $AD=2.1$ செ.மீ எனில், AE –யின் நீளம்
(அ) 1.4 செ.மீ (ஆ) 1.8 செ.மீ (இ) 1.2 செ.மீ (ஈ) 1.05 செ.மீ


7. $\Delta ABC$ -யில் $AD$ ஆனது, $\angle BAC$ -யின் இருசமவெட்டி. $AB=8$ செ.மீ, $BD=6$ செ.மீ மற்றும் $DC=3$ செ.மீ எனில், பக்கம் $AC$ -யின் நீளம்
(அ) 6 செ.மீ (ஆ) 4 செ.மீ (இ) 3 செ.மீ (ஈ) 8 செ.மீ

8. கொடுக்கப்பட்ட படத்தில் $\angle BAC=90^\circ$ மற்றும் $AD\perp BC$ எனில்,
(அ) $BD\cdot CD=BC^2$ (ஆ) $AB.AC=BC^2$
(இ) $BD\cdot CD=AD^2$ (ஈ) $AB\cdot AC=AD^2$




9. 6மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதளத் தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையேயுள்ள தொலைவு 12 மீ எனில் அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன?
(அ) 13 மீ (ஆ) 14 மீ (இ) 15 மீ (ஈ) 12.8 மீ

10. கொடுக்கப்பட்ட படத்தில், $PR=26$ செ.மீ, $QR=24$ செ.மீ, $\angle PAQ=90^\circ$, $PA=6$ செ.மீ மற்றும் $QA=8$ செ.மீ எனில் $\angle PQR$ –ஐக் காண்க.
(அ) $80^\circ$ (ஆ) $85^\circ$ (இ) $75^\circ$ (ஈ) $90^\circ$





11. வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்
(அ) மையம் (ஆ) தொடு புள்ளி (இ) முடிவிலி (ஈ) நாண்


12. வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?
(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) முடிவற்ற எண்ணிக்கை (ஈ) பூஜ்ஜியம்

13. $O$ -வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி $P$ -யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் $PA$ மற்றும் $PB$ ஆகும். $\angle APB=70^\circ$ எனில், $\angle AOB$ -யின் மதிப்பு
(அ) $100^\circ$ (ஆ) $110^\circ$ (இ) $120^\circ$ (ஈ) $130^\circ$

14. படத்தில் $O$ -வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் $CP$ மற்றும் $CQ$ ஆகும். $ARB$ ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி $R$ வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும். $CP=11$ செ.மீ மற்றும் $BC=7$ செ.மீ, எனில் $BR$ –யின் நீளம்
(அ) 6 செ.மீ (ஆ) 5 செ.மீ
(இ) 8 செ.மீ (ஈ) 4 செ.மீ




15. படத்தில் உள்ளவாறு $O$ -வை மையமாகக் கொண்ட வட்டத்தின் தொடுகோடு $PR$ எனில், $\angle POQ$ ஆனது
(அ) $120^\circ$ (ஆ) $100^\circ$
(இ) $110^\circ$ (ஈ) $90^\circ$




P.LAKSHMANAN,
BT ASSISTANT,
GHSS., PAPPAPATTI,
MUSIRI TK, TRICHY DT.
9843954265.



LIVEWORKSHEETS